அனுப்புநர்

சா.சேதுராமவர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்/ இணை இயக்குநர் (கல்வி) புதுச்சேரி

ந.க.எண். 025639 /எப்1 / 2020 நாள் :29.09.2021

ஐயா /அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு மார்ச் 2021 – பள்ளித் தலைமையாசிரியர் – மதிப்பெண் பட்டியல்கள் (**Statement of Marks**) மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் (TML) - இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்தல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக

பார்வை இவ்வலுவலக இதே எண்ணிட்ட செய்திக் குறிப்பு, நாள்.28.09.2021

******

முதன்மைக் கல்வி அலுவலர்கள், தங்களது மாவட்டத்தில் உள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும், 2020–2021–ஆம் கல்வி ஆண்டில் மேல்நிலை முதலாம் ஆண்டு பயின்ற மாணவர்களுக்கான மதிப்பெண் பட்டியல்கள் (**Statement of Marks**) மற்றும் பள்ளிக்குரிய அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் (TML) ஆகியவற்றை இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்தல் தொடர்பாக பின்வரும் அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும், **30.09.2021 (வியாழக்கிழமை)** முற்பகல் / பிற்பகல் **11.00 மணி** முதல் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, பள்ளிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள **User-ID மற்றும் Password—**ஐ பயன்படுத்தி 2020–2021–ஆம் கல்வி ஆண்டில் மேல்நிலை முதலாம் ஆண்டு பயின்ற தங்கள் பள்ளி மாணவர்களுக்கான மதிப்பெண் பட்டியல்கள் (Statement of marks) மற்றும் பள்ளிக்குரிய அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் (TML), ஆகியவற்றை பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும்.

..2..

2. அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படும் மதிப்பெண் பட்டியல்களில் உள்ள விவரங்களை பள்ளித் தலைமையாசிரியர் சரிபார்த்து, அவற்றில் மாணவர் / பெற்றோர்களது பெயர், தலைப்பெழுத்து, பிறந்த தேதி ஆகியவற்றில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், தலைமையாசிரியரே அத்திருத்தத்தை மேற்கொண்டு மதிப்பெண் பட்டியலில் சான்றொப்பம் மற்றும் பள்ளி முத்திரையினை இட்டு தயாராக வைத்துக் கொள்ள வேண்டும். மதிப்பெண் பட்டியல்களில் சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் சான்றொப்பமிட்டிருந்தால் மட்டுமே, அம்மதிப்பெண் பட்டியல் செல்லத்தக்கது.

3. மேற்குறிப்பிட்டவாறு சான்றொப்பமிட்ட மதிப்பெண் பட்டியல்களை (Statement of marks) **30.09.2021 பிற்பகல் 01.00 மணி முதல்** பள்ளி மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

4. **மார்ச் 2021 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு தொடர்பாக மாணவர்களுக்கு தற்போது மதிப்பெண் பட்டியல் (Statement of marks) மட்டும் வழங்கப்படும். அரசுத் தேர்வுத் துறையால் அச்சடிக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் (Printed Mark Certificate) வழங்கப்படும் வரை மட்டுமே இம்மதிப்பெண் பட்டியல் செல்லும்.**

5. மதிப்பெண் பட்டியல்களை மாணவர்களுக்கு வழங்கிய பின்பு, மதிப்பெண் பட்டியல்களில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் திருத்தங்கள் குறித்த விவரங்களையும் பள்ளித் தலைமையாசிரியர் பட்டியலாக தயாரித்து வைத்தல் வேண்டும். அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் மாணவர்களது விவரங்களில் திருத்தங்கள் மேற்கொள்ள பின்னர் வாய்ப்பு வழங்கப்படும்.

ஒம்/–
**இயக்குநர்**

**<u>நகல்:</u>**

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.